5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இருப்புப் பாதை வழியாக உத்தரப்பிரதேசத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்து சேர்க்கும் பணியை கண்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 7.1.2011 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறமையை பயிற்றுவிக்கும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் திட்டத்தை நடைமுறைப்படுத்த கான்ஃபிடரேஷன் ஆஃப் இந்தியன் இண்டஸ்டிரி ஐ மாநில கலந்தறிதற்குரியவராக நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 15.2.2011 ஆம் நாளிட்ட 47 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்யும் பணியை டெல்லி மெட்ரோ இரயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 24.2.2011 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. தமிழக அரசின் சேவைகளை மாநில இணையதளம் மற்றும் மாநில சேவை விநியோக நுழைவாயில் வழியாக தமிழக மக்களுக்கு வழங்குவதற்கான செயல்பாட்டு முகமையாக திருவாளர்கள் விப்ரோ லிமிடெட் நிறுவனத்தை நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 24.2.2011 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2011 டிசம்பர் 15]

5. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல், 2011–ஐ நடத்துவதற்காக வாக்குப்பதிவு மையங்களுக்கு அகண்ட அலைவரிசை இணைப்பு கொடுப்பது, முதன்மைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் இதர தேர்தல் அதிகாரிகளுக்கிடையே வாடகைக்கு இணையதள இணைப்பினை வழங்குவது, கைபேசிகளுக்கான வாடிக்கையாளர் அட்டைகள் வாங்குவது மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் கட்டளைப்படி ஏற்பாடு செய்து தரப்பட வேண்டிய இதுபோன்ற இதர சேவைகளை திருவாளர்கள் பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 28.3.2011 ஆம் நாளிட்ட 97 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. நெசவு சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை கடலில் கொண்டு கலக்கும் திட்டத்தினால் சுற்றுப்புற சூழல்களில் ஏற்படும் தாக்கத்தினை மதிப்பீடு செய்யும் ஆய்வினை மேற்கொள்ள தேசிய பெருங்கடல்சார் நிறுவனத்தையும் மற்றும் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தையும் நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 19.5.2011 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள திருமண உதவித் திட்டங்களின் பயனாளிகளுக்கு திருமாங்கல்யம் செய்வதற்கான 4 கிராம் 22 கேரட் தங்கம் இலவசமாக வழங்குவதற்கு சமூகநலத் துறை இயக்குநரால் பொதுத் துறை வங்கிகள், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் அஸோஸியேட் வங்கிகளிலிருந்து தேவையான தங்கத்தை வாங்குவதற்கு வகை செய்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 12.7.2011 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்படும் வரையில், செய்யப்பட்டுள்ள இடைக்கால

ஏற்பாட்டுக்குத் தேவையான மென்பொருள் தீர்வுகள் வழங்க மற்றும் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பயிற்சிபெற்ற நபர்களை அவுட்சோர்ஸிங் மூலமாக வழங்கும் பணியை திருவாளர்கள் ஹெல்த் ஸ்பிரிண்ட் நெட்வொர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 29.7.2011 ஆம் நாளிட்ட 207 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. சென்னை மோனோ இரயில் திட்டத்தின் சாத்தியக்கூறு ஆய்வறிவிக்கை தயாரிக்கும் பணியில் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை சேவைகள் நிறுவனத்தினை ஈடுபடுத்துவது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 12.8.2011 ஆம் நாளிட்ட 216 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான குளச்சல் மீன்பிடி துறைமுகத்தின் ஆரவாரமற்ற அலை ஆராய்வினை மேற்கொள்ளும் பணியை பூனேயைச் சேர்ந்த மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 25.8.2011 ஆம் நாளிட்ட 227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. கோயம்புத்தூர் விளாங்குறிச்சியில் 'எல்காட்' நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள முதன்மை ஒப்பந்ததாரரால் அல்லது துணை ஒப்பந்ததாரரால் தொழில்நுட்பப் பூங்காவிற்காக பயன்படுத்துவதற்கான யாதொரு பொருட்களின் விற்பனைமீது யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிகவரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் 1.3.2011 ஆம்

2011 டிசம்பர் 15]

நாளிட்ட 47 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் 19.9.2011 ஆம் நாளிட்ட 117 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) 89(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2011.)

2. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2011.)

* * * * *

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS